உ

கடவுள் துணை.

செந்தமிழ்

தொகுதி-கந.] ராக்ஷஸ ஹு சித்திரைமீ [பகுதி-சு.
Vol. XIII. April—May, 1915. No. 6.

அப்பர்தேவாரத்தாற்கொள்ளக்கிடக்குங்கீரனார் யார்?

"நன்பாட்டுப்புலவனாய்ச்சங்கமேறி
நற்கனகக்கிழி தருமிக்கருளினோன் காண்"

இது திருநாவுக்கரசர்வாக்கு. திருநாவுக்கரசரும் சம்பந்தரும் ஒரேகாலத்தவரென்பதும், இருவரும் பெருநட்பினரென்பதும் யாவரு மறிந்தவுண்மை. திருநாவுக்கரசர் இத்திருவாக்கிற்சுட்டியது தருமிக்குப் பொற்கிழியளித்தசரித்திரம். தருமிக்குச் சிவபெருமான்கொடுத்தருளியபாடல் வருமாறு:—

"கொங்குதேர்வாழ்க்கையஞ்சிறைத்தும்பி
காமஞ்செப்பாதுகண்டதுமொழிமோ
பயிலியதுகெழீஇயநட்பின்மயிலியற்
செறியெயிற்றரிவைகூந்தலி
னறியவுமுளவோநீயறியும்பூவே"

இச்செய்யுளைத் தருமிகொண்டுசென்று சம்பகபாண்டியனுக்குக் காட்டியபோது கீரனார் அதிற் குற்றம்பாரித்து அதற்குரியபொற்கிழியைக் கொடுக்கவிடாது தடுத்தார். அதுகேட்டுச் சிவபெருமான் ஒருபுலவராய்வெளிப்பட்டு அப்பாடலினதுதகுதியெடுத்துக்காட்டித் தருமிக்கு அப்பொற்கிழியைவழங்குமாறருளினர்.

தருமிக்குச் சிவபெருமான் பாடல்கொடுத்தருளியதும், அதிலே கீரனார் குற்றம்பாரித்துப் பொற்கிழிவழங்காதுதடுத்ததும், அப்போது சிவபெருமான் ஒருபுலவராய்ச்சென்று சங்கமேறியதும், அப்பாடலின் தகுதியைநாட்டியதும், பொற்கிழியுதவுமாறருளியதுமாகிய பெருங் கருணைச்செய்திகளைத் திருநாவுக்கரசர்வியந்து தமதுதேவாரத்தில் "நன்பாட்டுப்புலவனாய்" என்று எடுத்துப்பாடுவாராயினர்.

*

அற்றேல், கீரனார் மூன்றாஞ்சங்கமுடிவில்விளங்கியவரன்றோ. அவர்செய்தியை எடுத்துக்கூறியதிருநாவுக்கரசர் மூன்றாஞ்சங்கத்துக்குப் பிற்பட்டவராகற்பாலர். சம்பந்தர் திருநாவுக்கரசர்காலத்தவராதலின் அவரும் மூன்றாஞ்சங்கத்துக்குப்பின்னுள்ளவரேயாவர் என்பது சிலர்துணிபு.

இத்துணிபு நன்குசெய்யப்பட்டதாகத்தோன்றவில்லை. தருமிகொண்டுசென்றபாடலிற் குற்றம்பாரித்தார் மூன்றாஞ்சங்கத்திறுதியிலிருந்தகீரனார்தாமா? அன்றி, அப்பெயருடைய மற்றொருவராவென்பதும், கீரப்பெயருடையார் ஒருவரா பலராவென்பதும் அவர்தாம் எவ்வெக்காலத்திருந்தவரென்பதும் ஆராயப்படுதல்வேண்டும்.

திருவிளையாடற்புராணத்தின்படி, தருமிகொண்டுசென்ற'கொங்குதேர்வாழ்க்கை' என்னுந் தெய்வப்பாடலிற் குற்றம்பாரித்தவர் கீரனார் என்னு மொருபுலவர். அவரே அகஸ்தியர்பால் இலக்கணங்கேட்டு விபரீதநீங்கப்பெற்றவர். அவர் சம்பகபாண்டியன்காலத்தில்விளங்கியவர். அவர்க்குக் கீரனார் என்னும்பெயரே பெருவழக்கு. நக்கீரனாரென்னும்பெயரும் சிறுவரவினதாய்ப் பிற்காலத்துவழங்கிற்று.

அவர்காலத்துக்குப்பின்னர்க் கீரனார் என்னும் பெயர்கொண்டார் அநேகர். அவருட் குட்டுவன்கீரனார், தும்பிசேர்கீரனார், பொருந்திலிளங்கீரனார், மதுரைக்கணக்காயனார்மகனார்நக்கீரனார், மதுரைநக்கீரனார், மோசிகீரனார் என்போர் சிறந்தோர்.

இவருள்ளே மதுரைக்கணக்காயனார்மகனார் நக்கீரனார் இறையனாரகப்பொருளுக்கு உரைசெய்தவிரகர். இவரே திருமுருகாற்றுப்படையும், நெடுநல்வாடையும் பாடியவர். இவர் உக்கிரப்பெருவழுதிகாலத்தவர். மூன்றாஞ்சங்கத் திறுதிக்காலத்திருந்தவர்.

நெற்றிக்கண்ணைக்காட்டினாலுங் குற்றங்குற்றமே எனக்கூறி அஞ்சாதுவாதாடியகீரனாரும் வேறு, மதுரைக்கணக்காயனார்மகனார் நக்கீரனாரும்வேறு. முன்னையவர் இரண்டாஞ்சங்கத்துக்கடைக்கூற்றில் விளங்கியவர். பின்னையவர் மூன்றாஞ்சங்கத்திறுதிக்காலத்திலேவிளங்கியவர். இவரை அவராகவும், அவரை இவராகவுங்கொண்டுமயங்குவார் அநேகர். யானுஞ்சிறிதுகாலத்துக்குமுன் அவ்வாறுகொண்டு மயங்கினேன். ஆராய்ச்சியாற் பின்னர்த்தெளிந்தேன். அதுநிற்க.

1. சம்பகபாண்டியன்முதல்,
2. பிரதாபசூரியன்
3. வங்கிசத்துவசன்
4. இரிபுமர்த்தனன்
5. சோழவமிசாந்தகன்
6. சேரவமிசாந்தகன்
7. பாண்டிவமிசேசன்
8. வமிசசிரோமணி
9. பாண்டீச்சுரன்
10. குலத்துவசன்
11. வமிசபூடணன்
12. சோமசூடாமணி
13. ராஜசூடாமணி
14. பூபசூடாமணி
15. குலேசபாண்டியன்
16. அரிமர்த்தனன்
17. சகநாதபாண்டியன்
18. வீரவாகு
19. விக்கிரமவாகு
20. பராக்கிரமவாகு
21. சுரபிமாறன்
22. குங்குமபாண்டியன்
23. கர்ப்பூரபாண்டியன்
24. காருண்ணியபாண்டியன்
25. புருடோத்தமன்
26. சத்துருசாதனன்
27. கூன்பாண்டியன்

ஈறாக இருபத்தேழுபாண்டியர் வழிவழியரசுபுரிந்தனர் என்பது திருவிளையாடற்புராணம்.

இறையனாரகப்பொருளுரைப்படி கூன்பாண்டியன்முதல் உக்கிரப் பெருவழுதியீறாக நாற்பத்தொன்பதுபாண்டிய ருளர்.

உக்கிரப்பெருவழுதிகாலத்தில்விளங்கியவராகிய மதுரைக்கணக் காயனார்மகனார்நக்கீரனார்க்கும் முன்னைய கீரனார்க்கு மிடையே எழுபத் தைந்துபாண்டியர் அரசுசெய்துபோயினர் என்பது வெளிப்படையா கின்றது. இறையனாரகப்பொருளுரைப்படி கூன்பாண்டியன்முதல் உக்கிரப்பெருவழுதியீறாகச்சென்றகாலம் ஆயிரத்தெண்ணூற்றைம் பதுவருடம். இக்கணிதப்படி சம்பகபாண்டியன்முதற் கூன்பாண்டிய னீறாகச்சென்றகாலம் (900) தொளாயிரம்வருடமாகும். ஆ க வே முன்னையகீரனார் பின்னையகீரனாருக்கு 2750 வருடங்களுக்குமுன்னர் விளங்கினராகற்பாலர்.

ஆதலால் முன்னையகீரனாரே அப்பர்தேவாரத்தாற்கொள்ளக்கிடப் பவரென்பது நன்குதுணியப்படும்.

ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை.

இளங்கோவடிகள்குறித்துள்ள பழையசரிதங்கள்.

இளங்கோவடிகளென்பார் இற்றைக்கு 1800 ஆண்டுகட்குமுன்னர்ச் சேரநாட்டில் வஞ்சிநகரத்திலிருந்து ஆட்சிபுரிந்த சேரன்செங்குட்டுவனது தம்பியாவர். மிக்க இளம்பருவத்திலேயே துறவுபூண்டு, அவ்வாச்சிரமத்திற்கேற்பவொழுகிவந்த இவ்வடிகள், உலகத்திற்குப் பயன்படும்வண்ணம், தாமியற்றியருளிய சிலப்பதிகாரம்என்னும் நூலின்கண் நமதுபுராணேதிகாசங்களிற்சொல்லப்படுவனவும் பிறவுமாய சில அருமைவாய்ந்த பழையசரித்திரங்களைச் சமயம்வாய்த்தபோதெல்லாம் ஆங்காங்குக் குறித்திருக்கின்றனர். பண்டைக்காலங்களி லியற்றப் பெற்ற ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்றாயதும், யாவராலும்புகழ்ந்து போற்றப்பெற்றதுமாய சிலப்பதிகாரத்திற்கூறப்படுஞ்சரித்திரங்கள், நமது புராதனசரித்திரஆராய்ச்சியிற்புகுந்துள்ள அறிஞர்பலர்க்கும் பெரிதும் பயன்படுமென்றுகருதி, அவற்றை முறையே ஈண்டுத் தொகுத்தெழுதுகின்றேன்.

1. மனுநீதிகண்டசோழன், தனது அரும்பெறற்புதல்வனைத் தேர்க்காலிலிட்டது.

வாயிற்கடைமணிநடுநாநடுங்க
வாவின்கடைமணியுகுநீர்நெஞ்சுசுடத்தான்ற
னரும்பெறற்புதல்வனையாழியின்மடித்தோன் ;—

(சிலப்—வழக்குரைகாதை 53—55)

.........................முன்வந்த
கறவைமுறைசெய்தகாவலன்காணம்மானை
காவலன்பூம்புகார்பாடேலோரம்மானை ;—

(வாழ்த்துக்காதை—அம்மானைவரி 2.)

2. சிபிச்சக்கரவர்த்தி, தன்பாலடைக்கலம்புக்கதொரு புறவின் நிமித்தம் தன்னுடம்பையரிந்துகொடுத்தது.

எள்ளறுசிறப்பினிமையவர்வியப்பப்
புள்ளுறுபுன்கண்டீர்த்தோன் ;—

(வழக்குரைகாதை 51—52)

புறவுநிறைபுக்குப்பொன்னுலகமேத்தக்
குறைவிலுடம்பரிந்தகொற்றவன்யாரம்மானை
குறைவிலுடம்பரிந்தகொற்றவன்முன்வந்த
கறவைமுறைசெய்தகாவலன்காண்;—

(வாழ்த்துக்காதை—அம்மானைவரி 2)

குறுநடைப்புறவினெடுந்துயர்தீர
வெறிதருபருந்தினிடும்பைநீங்க
வரிந்துடம்பிட்டோனறந்தருகோலும்;—

(நீர்ப்படைக்காதை 166—168)

3. உக்கிரகுமாரபாண்டியன், தேவேந்திரன்பூட்டிய ஆரத்தைப் பூண்டது.

திங்கட்செல்வன்றிருக்குலம்விளங்கச்
செங்கணாயிரத்தோன்றிறல்விளங்காரம்
பொங்கொளிமார்பிற்பூண்டோன்வாழி;—

(காடுகாண்காதை—23—25)

கோவாமலையாரங்கோத்தகடலாரந்
தேவர்கோன்பூணாரந்தென்னர்கோன்மார்பினவே;—

(ஆய்ச்சியர்குரவை, உள்வரிவாழ்த்து 1)

வானவர்கோனாரம்வயங்கியதோட்பஞ்சவன்றன்
மீனக்கொடிபாடும்பாடலேபாடல்;—

(வாழ்த்து—வள்ளைப்பாட்டு 2)

4. உக்கிரகுமாரபாண்டியன், தன்கைவளையால் இந்திரன்முடியையுடைத்ததும், மேகத்தைச்சிறைப்படுத்தியதும்.

முடிவளையுடைத்தோன்முதல்வன்சென்னியென்
றிடியுடைப்பெருமழையெய்தாதேகப்
பிழையாவிளையுட்பெருவளஞ்சுரப்ப
மழைபிணித்தாண்டமன்னவன்வாழ்கென;—

(காடுகாண்காதை 26—29)

வச்சிரத்தடக்கையமரர்கோமான்
உச்சிப்பொன்முடியொளிவளையுடைத்தகை;—

(கட்டுரைகாதை 50—51)

......................கொற்றத்
திடிப்படைவானவன்முடித்தலையுடைத்த
தொடித்தோட்டென்னவன்கடிப்பிடுமுரசே;—

(ஆய்ச்சியர்குரவை—படர்க்கைப்பரவல் 3)

5. குலசேகரபாண்டியன், தன்கைகுறைத்தது.

உதவாவாழ்க்கைக்கீரந்தைமனைவி
புதவக்கதவம்புடைத்தனனோர்நா
ளரசவேலியல்லதியாவதும்
புரைதீர்வேலியில்லெனமொழிந்து
மன்றத்திருத்திச்சென்றீரவ்வழி
யின்றவ்வேலிகாவாதோவெனச்
செவிச்சுட்டாணியிற்புகையழல்பொத்தி
நெஞ்சஞ்சுடுதலினஞ்சிநடுக்குற்று
வச்சிரத்தடக்கையமரர்கோமான்
உச்சிப்பொன்முடியொளிவளையுடைத்தகை
குறைத்தசெங்கோற்குறையாக்கொற்றத்
திறைக்குடிப்பிறந்தோர்;—

(கட்டுரைகாதை 42—53)

6. வானத்தின்கண்ணசைந்துகொண்டிருந்த மூன்றுமதில்களைச் சோழனொருவன் அழித்தது.

..........................உயர்விசும்பிற்
றூங்கெயின்மூன்றெறிந்தசோழன்காணம்மானை
சோழன்புகார்நகரம்பாடேலோரம்மானை;—

(வாழ்த்துக்காதை—அம்மானைவரி 1)

வெயில்விளங்குமணிப்பூண்விண்ணவர்வியப்ப
வெயின்மூன்றெறிந்தவிகல்வேற்கொற்றமும்;—

(நீர்ப்படைக்காதை 164—165)

7. பாண்டவர்க்கும் கௌரவர்க்கும்நடந்த பெரும்போரில் இருபக்கத்தார்க்கும் பெருஞ்சோற்றுதியன்சேரலாதன் உணவளித்தது.

ஓரைவரீரைம்பதின் மருடன்றெழுந்த
போரிற்பெருஞ்சோறு போற்றாது தானளித்த
சேரன்பொறையன் மலையன் றிறம்பாடிக்
கார்செய்குழலாடவாடா மோவூசல்;—

(வாழ்த்துக்காதை—ஊசல்வரி 2)

8. சேரனொருவன் கடற்கடம்பெறிந்தது.

கடம்புமுதறடிந்தகாவலனைப்பாடிக்
குடங்கைநெடுங்கண்பிறழவாடாமோவூசல்
கொடுவிற்பொறிபாடியாடாமோவூசல்;—

(வாழ்த்துக்காதை ஊசல்வரி 1)

......................வான்கோட்டாற்
கடந்தடுதார்ச்சேரன் கடம்பெறிந்தவார்த்தை
படர்ந்தநிலம்போர்த்தபாடலேபாடல்;—

(வாழ்த்துக்காதை - வள்ளைப்பாட்டு 2)

முந்நீரினுள் புக்குமூவாக்கடம்பெறிந்தான்
மன்னர்கோச்சேரன்வளவஞ்சிவாழ்வேந்தன்;—

(ஆய்ச்சியர்குரவை - உள்வரிவாழ்த்து 3.)

..............................ஊங்கணூர்மருங்கு
கடற்கடம்பெறிந்தகாவலனாயினும்;—

(நடுகற்காதை 134—135)

மாநீர்வேலிக்கடம்பெறிந்திமயத்து
வானவர்மருளமலைவிற்பூட்டிய
வானவர்தோன்றல்;—

(காட்சிக்காதை 1—3)

(தொடரும்.)

T. V. சதாசிவப்பண்டாரத்தார்,

திருப்புறம்பயம்.

ஸ்ரீ

பாரதயுத்தகாலம்.

பூர்விகஸம்ஸ்கிருதபுஸ்தகங்களிற்சொல்லப்பட்டிருக்கிற சில முக்கியமானவிஷயங்களின்காலவரையறைகளை உத்தேசமாகக்கூடச் சொல்லக்கூடாதபடி அவ்வளவு அந்தகாரத்திற் பூர்விகஇந்தியசரித்திரமானது மறைவுபட்டிருக்கிறது. வித்வான்கள் சிறிதுநிச்சயத்துடன் முடிவுக்குக்கொண்டுவந்திருக்கிறகாலவரையறைகளுக்குள் மிகவும்முந்தியது புத்தநிர்யாணகாலமாகிய கி. மு. 480.* இதற்கு முந்தினசங்கதிகளின்காலவரையறைகள் பலவிதமான பின்ன அபிப்பிராயங்களுக்கு உட்பட்டிருக்கின்றன. அப்படிப்பட்டவைகளுள், பாரதயுத்தகாலமுமொன்று. வைதிகர்களின்கொள்கை இந்தயுத்தம் 5017 வருஷங்களின்முன்நடந்ததென்பது. இந்தயுத்தகாலத்திலிருந்துதான் கலியுகம் ஆரம்பித்ததாகச்சொல்லப்படுகிறது. மஹாபாரதபுத்தகத்திற்சொல்லப்பட்டிருப்பவை கர்ணபரம்பரை ஐதிகங்களைப் பொறுத்தவைகளாயிருப்பதால் அவற்றைநம்பிக் காலவரையறை செய்யப்புகுவது மண்குதிரையைநம்பி ஆற்றிலிறங்குவதுபோலாகுமென்று சிலர் நினைக்கிறார்கள்.

இந்தியசரித்திரவிஷயங்களுக்குள், இந்தயுத்தமானது, வாஸ்தவமாய்நடந்த முதற்சரித்திரக்குறிப்பென்று பூர்விக இந்திய (காவிய) நூல்களைச் சரித்திரநோக்கமாயறியும் மேற்றிசைப்பண்டிதர்கள்கூட நம்புவதால் நாம் சந்தேகங்களுக்கு இடங்கொடுக்கவேண்டியது அநாவசியம். இந்தயுத்தகாலத்தைப்பற்றிமுடிவுக்குவந்தவர் அநேகர்களுள், சிலரது அபிப்பிராயங்களைமாத்திரம் பூர்வபக்ஷமாகக்கூறிச் சித்தாந்தமாக ஸ்ரீமாந்-ஸி. வி. வைத்யர் அவர்களின் சிறந்த அபிப்பிராயத்தை† யெடுத்துக்காட்டுகிறேன்.

---

* கணனமுறையில் மிகத்தேர்ச்சியடைந்தவர்களாகிய ம-௱-௱-ஸ்ரீ L. D. சுவாமிக்கண்ணுப்பிள்ளையவர்கள் கி. மு. 478 என்பர். சமீபத்தில் நடந்த சிலோன் ஏஷியாடிக்ஸொஸைட்டிப்பிரசங்கத்தில் வேறொருவர் இக்காலத்தைக் கொஞ்சம்வேறுபடக்கூறினார்.

† இவ்வபிப்பிராயமும், ஸ்ரீமாந்-கோபாலய்யரவர்களின் அபிப்பிராயமும் ஒருவிதமாய் மகா-௱-௱-ஸ்ரீ L. D. சுவாமிக்கண்ணுப்பிள்ளையவர்களாற் சீர்திருத்தப்பெற்றிருக்கின்றனவென்றுதெரிகிறது.

இந்தியவித்வான்கள்.

1. ப்ரோபஸர் M. ரங்காசார்யஸ்வாமிகளின் அபிப்பிராயம்:— கலியுகஆரம்பம் 5000வருஷத்துக்குமுன் என்பது கொஞ்சம் மிகை படக்கூறலாகும். கணிதசாஸ்திரியாகிய ஆர்யபட்டர், சுத்தஊக அநுமானத்தின்பேரில் முந்தியகாலவரையறையை ஏற்படுத்திவிட்டார் என்பது. (Ch-col-Magaziene: yugas)

2. ரமேசசந்த்ரதத்தர் அபிப்ராயம்:—இந்தக்காலாவதியிலாண்ட அரசர்களின்வம்சபரம்பரை புராணங்களுட் குறிக்கப்பட்டிருக்கின்றன. ஜநமேஜயபரீக்ஷித்தின்ஜநநகாலத்துக்கும் நந்தன்அரசாட்சிக் காலத்துக்கும் மத்தியில் 1015வருஷசென்றனவென்று பாகவதபுராணம் கூறுகிறது. குருக்ஷேத்ரயுத்தம்நடந்து 3 மாதத்துக்குப்பின் பரீக்ஷித்து பிறந்தானென்று மஹாபாரதமும் புராணங்களும் கூறுகின்றன. நந்தன் சந்த்ரகுப்தனுக்கு நூறுவருஷங்களுக்குமுந்தினவனென்றும், சந்த்ரகுப்தன் கி. மு. 312-லிருந்தானென்றும் நமக்குத் தெளிவாய்த்தெரிந்தவிஷயம். ஆகையினால் 312+100+1015= 1427 கி. மு. வில் பாரதயுத்தம்நடந்திருக்கவேண்டும் (Civilisation in Ancient India ii) என்பது.

3. சித்தூர் V. கோபாலையரவர்கள் அபிப்பிராயம்:—கி. மு. 1194வருஷ அக்டோபர்மீ 14௳ மகாபாரதயுத்தம் ஆரம்பித்து 31௳ இரவுடன்முடிந்ததென்பது. இந்த அபிப்பிராயத்துக்கு இவர் எடுத்துக்காட்டியிருக்குங்காரணங்களின்சுருக்கங்களாவன:—

(1) வேதாங்கஜ்யோதிஷகிரந்தத்தை உற்று ஆராய்ந்தால் கலி ஆரம்பம் 1173 கி. மு. என்று ஏற்படுதல்.

(2) கார்க்கருடையவும் அவர்பிரஸ்தாபிக்கிற யவனப்படையெடுப்பினுடையவும் காலத்தை ஆராய்ந்ததும், இந்துஸ்தானத்திலிருந்து கிரேக்கர்கள் திரும்புவது யுகத்தின்முடிவில் என்று அவர் குறித்துளதை எடுத்துக்காட்டினதும், (இந்த அவர் வாக்குமூலத்திலிருந்து) 165 கி. மு. வுக்குக் கொஞ்சம்முன்புமுடிந்ததென்றயுகமானது 1165 கி. மு. வுக்குச் சிலவருஷங்களுக்குமுன் ஆரம்பித்திருக்க வேண்டுமென்று ஊகித்ததும்.

(3) பழையசரித்திரக்காரராற்குறிக்கப்பட்டகாலங்களை விளக்குவதிலிருந்து ஏற்பட்ட, 'கலியுகம் 1177–6 கி. மு. வில் ஆரம்பித்திருக்கவேண்டும்' என்றமுடிபு.

(4) 1176 கி. மு. விற் கலி ஆரம்பித்ததென்றுநிறுத்துவதற்கு வேறொருஆதாரமாயிருந்தது கொல்லம்ஆண்டு என்பது.

(5) 1176 கி. மு வுக்குமுன்வந்த ஒருகுறிப்பிட்டகாலத்திற் கலி ஆரம்பித்திருந்தால் மகாபாரதத்திலுள்ள சிலகுறிப்புக்களால் 1194 கி. மு. வில் யுத்தம்நடந்ததாக ஏற்படுமென்பது.

(6) 'ராஜதரங்கிணி'யிற்குறித்திருக்கும் ஐதிகசர்ணபரம்பரைச் செய்தி யுத்தகாலத்தை 1190 கி. மு. வில் நிறுத்துமென்பது.

(7) 1192 கி. மு. வில் சப்தரிஷிமண்டலம் மகநக்ஷத்திரத்திலிருந்ததென்று ஆர்யபட்டர்குறித்திருப்பது யுத்தம் 1193 கி.மு. வில் நடந்திருக்குமென்ற அநுமானத்துக்கு இடங்கொடுத்ததென்பது.

(8) இவ்வுலகிற் பிரசித்திபெற்ற ஐந்துராஜாங்கங்களிலாண்ட அரசர்களின் சராசரி ஆளுகைக்காலம் 1193 கி. மு. வாக்கில் யுத்தம் நடந்ததென்றுநிறுத்த உபயோகமாயிருந்ததென்பது.

(9) ப்ருஹத்ஸம்ஹிதையில் எடுத்துக்காட்டப்பெற்றிருக்கும் விருத்தகர்க்கரின் ஒருஸ்லோகம் 1194—3 கி. மு. வில் யுத்தம்நடந்ததென்று அநுமானிக்க இடங்கொடுத்ததென்பது.

(10) கர்க்கராற்கொடுக்கப்பட்டயுத்தகாலமும் (அதாவது கி. மு. 1194—93) ப்ரஹஸ்பதி 60ஷ்த்தின் முதல்வருஷமும் ஒத்துவருவது.

(11) யுத்தகாலத்துக்குப்பின்வந்த ஒருகுறிப்பிட்டதினத்தைக் குறிக்கும் ஒரு மகாபாரதசுலோகத்துக்கு வேதாங்கஜ்யோதிஷத்திற் கூறப்படும் சிலவிஷயங்களை ஏறிட்டுப்பார்த்து 1194 கி. மு. வின் பின்பாகத்தில் யுத்தம்நடந்திருக்கவேண்டுமென்று முடிவுக்குவந்தது (The chronology of Ancient India) என்பனவாம்.

மேற்றிசைவித்வான்கள்.

ப்ரொபஸர்மக்டானல். (Sanskrit literature) இவர் நம்வேதநூலாராய்ச்சியுள்ளவர். ஸம்ஸ்க்ருதகாவ்யசம்பந்தமான ஒரு சிறந்த

கிரந்தம் எழுதியிருக்கிறார். இவர் அபிப்பிராயம்:—ஒருவர்க்கொருவர் பக்கத்தில்வாழ்ந்துவந்தகுருஜாதியாருக்கும்பாஞ்சாலஜாதியாருக்கும் ஏற்கனவேநடந்திருந்த பூர்விகச்சண்டையாகிய உண்மைச்சரிதம் இவ்விதிகாசத்துட்பொதிந்துள்ளது. யஜுர்வேதத்தில் இவர்கள் ஒரே ஜாதியாராகக்கூறப்படுவதால் இவ்வேதகாலத்துக்குமுன்பே இவர்கள் ஒன்றுபட்டிருக்கவேண்டும். யஜுர்வேதகாடகத்தில் த்ருதராஷ்ட்ரன் பிரசித்தபுருஷனாகக்கூறப்பட்டிருக்கிறான். சதாபதப்ராம்ஹணத்தில் (ஜநமேஜய)பரீக்ஷித்தின்பெயர் அடிக்கடிவருகிறது. இதனால் யஜுர்வேதகாலத்துக்கு நூறுவருஷத்திற்குமுன்பாவது பாரதயுத்தம்நடந்திருக்கவேண்டும். 1000 கி. மு-வில் யஜுர்வேதமெழுதப்பட்டிருக்க வேண்டும். பாரதயுத்தம் ஆயிரத்துநூறு கி. மு. வில் நடந்திருக்க வேண்டும் என்பதாம்.

4. கல்கட்டா ஹைக்கோர்ட் மிஸ்டர் பார்ஜீட்டரின் அபிப்பிராயம்: (London Asiatic Society's Journal of April 1914) இருக்குவேதமந்த்ரபாகத்துக்கும் பாரதயுத்தத்துக்கும் காலத்தாற் சம்பந்தமிருக்கிறது. தேவாபி என்ற ஒருவன் இருக்குவேதமந்த்ரத்ரஷ்டா* வாகக்கூறப்படுகிறான். இவன் சந்தனுவுக்குத் தமையனாகவும், அவன் இராஜ்யாதிகாரத்தையடையும்பொருட்டுத் தான் சிம்மாசநத்திலிருந்துவிலகினவனாகவும், மகாபாரதத்திற்கூறப்படுகிறான். இருக்குவேதப்ரகத்தேவதையிலும் இப்படியே இவனைப்பற்றிக்கூறியிருக்கிறது. இதனால், பாரதயுத்தத்திற்குக்கொஞ்சம்முன்பு இருக்குவேதமெழுதப்பட்டதென்றுதெரிகிறது. இதற்குப் பின்வரும் வேறொரு திருஷ்டாந்தமும் காணலாம். பாஞ்சாலர்கள் சோமகர்களென்று அடிக்கடிகூறப்படுவதையும், துருபதன் சிலஇடங்களிற் சோமகி†என்று கூறப்படுதலையும் மகாபாரதத்திற்காணலாம். சோமகன் என்றொருவன் இந்தவம்சத்திலிருந்தனன். இவன் த்ருபதனுக்குப்பாபிதாமகன். (பாட்டனின்தகப்பன்) இருக்குவேதத்தில் இவன்தகப்பன்பெயர் சகதேவனென்றுசொல்லப்பட்டிருக்கிறது. ஐதரேயப்ராம்ஹணத்தில்

---

* கண்டவன் = செய்தவன்.

† திரௌபதியையும் வில்லிபுத்தூராழ்வார் இப்படிச் சிறப்பிப்பதைத் தமிழ்ப்பாரதத்துட்காணலாம்.

இவன் இராஜசூயம்வேட்டுச் சோமபானம்பண்ணிக் கீர்த்திபெற்றானென்றிருக்கிறது. பாஞ்சாலர்கள் சோமகர்களென்றுகூறப்படுவதற்கு இவனதுயாகமே காரணம்போலும். மேற்சொன்ன தேவாபியும் சோமகனும்* பாரதயுத்தத்துக்குமுன்னிருந்தவர்கள். இவர்கள் இருக்குவேதத்திற் பிரஸ்தாபிக்கப்படுவதுகொண்டு இருக்குவேதம் பாரதப்புஸ்தகத்துக்குக்கொஞ்சம்முன்புதான் எழுதப்பெற்றதென்று தெரிகிறது.

கலியுகத்துக்கு முந்தியகாலத்ததாகக்கூறப்படுகிறவம்சாவளிகளைப் புராணங்களிற்பார்த்தால், இருக்குவேதத்தின் ஒருமந்த்ராத்ரஷ்டாவும், பீஷ்மபிதா சந்தனுவின்சகோதரனுமான தேவாபி என்பவனுக்கும் விஸ்வாமித்ரன் என்பவனுக்கும் மத்தியில் 30-தலைமுறையிருந்ததாகக்காணலாம். தலைமுறையொன்றுக்கு 20வருஷ-வீதம்வைத்துக்கொண்டால் 600வருஷ ஆகின்றன. பாரதயுத்தம் 1000 கி. மு-வில் நடந்ததென்றுவைத்துக்கொண்டால் வேதமெழுதியகாலம் கி. மு. 1600 ஆகும். வேதகாலம் கி. மு. 1700-முதல் 1000-வரையென்றெழுதினவர்களின்கொள்கையையும் இது அநுசரிக்கிறதென்பதாம்.

மிஸ்டர் C. V. வைத்தியரின்சித்தாந்தம். இவர் இதிஹாஸங்களின் ஆராய்ச்சியில் மிகவல்லவர். இவர் அபிப்பிராயம்வருமாறு:—

(மேற்சொன்னபடி) பாரத யஜுர்வேத இருக்குவேதகாலங்கள் ஒன்றையொன்று ஒட்டியிருக்கின்றனவென்பதற்குப் போதுமான அத்தாட்சிஏற்பட்டிருக்கிறது. பாரதயுத்தம் யஜுர்வேதகாலத்துக்கு முன்னும் இருக்குவேதகாலத்துக்குப்பின்னும் நடந்ததென்பது வாஸ்தவந்தான். ஆகையால், இருக்குவேதமாவது, உள்ளாதாரத்தால் அதற்குப்பிந்தியதென்றுதெரிகிற சதாபதப்ராம்ஹணமாவது, இன்னகாலத்திற்செய்யப்பெற்றதென்று ஒருவாறுநிச்சயிக்கப்படுமானால், பாரதகாலமும் இன்னதென்றுநிச்சயிக்கப்பெற்றதாய்விடுகிறது. வேதவித்வான்களால் இருக்குவேதமானது கி. மு. 1500-க்கும் 1000-த்துக்கும்மத்தியிற் செய்யப்பட்டிருக்கவேண்டுமென்றும், சதாபதப்ராம்ஹணம் கி. மு. 800-க்கும் 500-க்கும்மத்தியிற் செய்யப்பெற்றிருக்கவேண்டுமென்றும் எழுதப்பட்டிருப்பது சரியல்ல.

---

* 'சோமபன்' என்றிருப்பின் நலம். சோமபன் = சோமபானம் பண்ணினவன்.

இவை இன்னும் அநேககாலத்துக்குமுந்தியேசெய்யப்பெற்றிருக்கவேண்டும். அதற்குரிய ஆதாரங்கள்வருமாறு :—

I. வானசாஸ்திர ஆதாரங்கள்.

1. ப்ரொபஸர் ஜாக்கோபி என்பவர் சமீபமாய்ச்செய்திருக்கும் ஜ்யோதிஷ ஆதாரபரிசோதனைகளிலிருந்து வேதகாலம் கி. மு. 4000த்துக்கும் மேற்போகிறதென்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

2. ஸ்ரீமாந்-சங்கரபாலகிருஷ்ணதீக்ஷிதர் தாம் எழுதிய பாரதீய ஜ்யோதிஷசரித்திரம் என்னும் சிறந்தவியாசத்தில் ஜ்யோதிஷ ஆதாரத்தின்மேல் ஒருகாலவரையறைகுறித்திருக்கிறார். அது சதாபதப்ராம்ஹணகாலவரையறையைக்குறிப்பிப்பதால், பிரஸ்தாப விஷயத்தைவிளக்க முக்கியபிரயோஜனமுள்ளதாயிருக்கிறது. அக்கிரந்தத்தின் ஓரிடத்திற் கிருத்திகாநக்ஷத்ரக்கூட்டமானது (Pleiades) அக்காலத்தில் நேர்கிழக்கில் உதயமானதாகச்சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது அவைகள் நிரக்ஷரேகையின்மேற்சாயாமலிருந்தனவென்பதே. இப்போது அவை நிரக்ஷரேகைக்குவடக்கேயிருக்கின்றன. அவை வருஷத்துக்கு 50 விகலைவீதம் முன்போக்கடைகின்றன. அந்நக்ஷத்ரக்கூட்டத்துள் அதிகப் பிரகாசமுள்ளநக்ஷத்ரமானது கி. மு. 2990-ல் அல்லது கி. மு. 3000வாக்கில் நிரக்ஷரேகையின்மேலிருந்ததென்று தீக்ஷிதர் கண்டுபிடித்திருக்கிறார். அது எழுதப்பட்டசமகாலத்தில்நடந்ததாக, அந்தப்ராம்ஹணபாகம் இவ்விஷயத்தைக்குறிப்பதால் அந்நூல் கி. மு. 3000-த்திற் செய்யப்பட்டதாகக்கொள்வதுதவறாகாது. (Indian Antiquary Vol. 24 pp. 245)

சூரியமார்க்கத்துக்கும் அதன்வடக்கேயிருக்கிற கிருத்திகைகளுக்குமத்தியில் 68-டிக்ரி இருக்கின்றனவென்றும், ஒவ்வொருபாகையின்முன்போக்கும் 72-வருஷங்களுக்குச்சரியானபடியால் 68 × 72 = 4896-வருஷங்களாகின்றனவென்றும் கணக்கிடப்படுகிறது. இதிலிருந்து 1900ஐ-த்தைக்கழிக்க 2996அல்லது ஏறக்குறைய 3000 கி. மு-வில் சதாபதப்ராம்ஹணம் எழுதப்பெற்றிருக்கவேண்டுமென்று ஏற்படுகின்றது. இதிற் பாரதபுருஷர்கள் பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கிறபடியால், பாரதயுத்தம் சுமார் கி. மு. 3100ல் அதாவது

5000வருஷங்களுக்குமுன் நடந்ததென்றுநிச்சயிக்கலாம். பாரதபுருஷர்களுக்குமுந்தின தலைமுறையினர் இருக்குவேதத்திற் பிரஸ்தாபிக்கப்படுவதால், இன்னுஞ்சிலநூற்றாண்டுகளைச்சேர்த்தால் இருக்குவேதமெழுதியகால மேற்படுகிறது. இதனால், வேதகாலம் கி. மு. 4000—3300 என்ற ஜாகோபியாரின்கொள்கை வலியுறுத்தப்பெறுதல்காண்க.

மேற்கூறியதீக்ஷிதருடையகணனம் ஆக்ஷேபிக்கத்தகாதபடி வலுவுற்றதாயினும், அக்கொள்கை தாக்கப்படாமலிருக்கவில்லை. 'பூர்வசங்கதிகளை ஞாபகத்திற்கொண்டிருக்குங் கோட்பாடு' (Theory of Reminiscence) என்றுசொல்லப்படுவதனடியான சிலஆக்ஷேபங்கள் சிலராற்செய்யப்பட்டன. அதாவது "கார்த்திகைகள் உதயமாகின்றனவென்று நிகழ்காலத்தாற் சதாபதங்கூறுவதொன்றைக்கொண்டு, அந்தக்கிரந்தம் எழுதப்பெற்றகாலத்தில் நக்ஷத்திரநிலை அப்படியிருந்ததென்றுகொள்ளவேண்டுமென்பது அவசியமில்லை. ஏனென்றாற் சிலகாலத்துக்குமுன்னிருந்த நக்ஷத்திரத்தின்நிலை கிரந்தமெழுதப்பட்டகாலம்வரை ஜநங்களின்ஞாபகத்திற்றங்கியிருந்து, எழுதும்போது அவ்விஷயம் அப்போதுநடப்பதுபோலக் குறிக்கப்பட்டதொன்றாயிருந்தாலுமிருக்கலாம்" என்பதாம். இன்னும், இவர்கள் தங்களுக்காதாரமாகவெடுத்துக்காட்டும் திருஷ்டாந்தம்யாதெனில், இப்போது வாஸ்தவமாய்வசந்தருதுவல்லாத சித்திரை வைகாசிமாதங்களை வசந்தகாலமென்றே பழங்கொள்கைபற்றிவழங்கிவருவதுபோல அதுவும் எழுதப்பட்டிருக்கவேண்டும் என்பதாம்.

ஒருசங்கதி உலகத்தில் வாஸ்தவமாய்நடந்தாலொழிய நடக்காததை நடந்ததுபோல எழுதிவைக்கமாட்டார்கள். மேலும், இக்கோட்பாடுடையார் கி. மு. 3000-த்திற் கிருத்திகைகள் நேர்கிழக்கிலுதிக்கவாரம்பித்தனவென்பதை மறுக்கவில்லை. ஆயினும், எழுதினவர்கள் முன்நடந்த ஐதீகநிலையை ஞாபகத்திற்கொண்டு தங்கள் காலத்தில்நடந்ததுபோலச் சதாபதப்ராம்ஹணத்தில் எழுதிவைத்தகாலம் கி. மு. 800 ஆயிருக்கவேண்டுமென்று ஹடவாதம்பண்ணுகிறார்கள். கிருத்திகைகள்நேர்கிழக்கிலுதிப்பதிலிருந்துவிலகியகாலம் கி. மு. 2600 ஆயிருக்கவேண்டும். (இவர்கள் அது எழுதப்பெற்றகாலம் கி. மு. 800 ஆயிருக்கவேண்டுமென்பதால்) 1800-வருஷத்துக்கு

முன்னடந்த ஒரு சமாசாரம் கொஞ்சகாலத்துக்குமுன் நடந்ததைப் போல் ஞாபகத்திலிருந்துவந்து எழுதுபவர்களுக்குத் தங்கள்காலத்து நடந்ததுபோல எழுத இடங்கொடுத்திருக்குமென்பது மிகவும் அசம்பாவிதமானதாம்.

3. தீக்ஷிதர்கணித்திருக்கிற இன்னொருகாலவரையறை வேதாங்க ஜ்யோதிஷகிரந்தம் கி. மு. 1400-ற் செய்யப்பட்டிருக்கவேண்டுமென் பது. மாக்ஸ்முல்லர் இதன்காலம் கி. மு. 1180 என்று வேறு ஆதரவு கொண்டு கண்டுபிடித்திருக்கிறார். இருவருக்குமுள்ள 220-வருஷத்து வித்தியாசம் ஒரு பெரியவித்தியாசமல்ல. பின்னவர்சொல்லுகிறபடி வேதாங்கஜ்யோதிஷகாலம் கி. மு. 1200 என்றுவைத்துக்கொண்டால் அதற்குமூலமாகிய சதாபதப்ராம்ஹணத்தின்காலம் இன்னும் பழமை யுற்றதாயிருக்கவேண்டும்.

4. மகாபாரதத்திலிருந்து ஆதாரமான சிலவிஷயங்களைக்கவ னிப்போம். பாண்டவர்கள்செய்வதாயொப்புக்கொண்ட 12-வருஷவன வாசகாலமும் ஒருவருஷ அஞ்ஞாதவாசகாலமும் சாந்த்ராயணரீதி யாய்க் கணிக்கப்பெற்றதென்றுதெரிகிறது. ஆனால் வேதாங்கஜ்யோ திஷகாலத்திலோ சாந்த்ராயணவருடகணனரீதி பழங்காலத்துச்சமா சாரமாய்விட்டது. இச்சோதிடகிரந்தம் எழுதப்பெற்றகாலம் கி. மு. 1400என்றுவைத்துக்கொண்டால், பாரதயுத்தகாலம் இதற்கு மிகவும் முந்தினகாலத்ததாயிருக்கவேண்டும்.

5. பிராம்ஹணத்திலும் பாரதத்திலும் நரபலியைப்பற்றிய விஷயங்கள், தெளிவாய் அப்போது நடந்துவந்தவிஷயங்களைக் கூலங் கஷமாய்க்குறிப்பதுபோலக் குறிக்கப்பெற்றிருப்பதால் அதுவழங்கி வந்ததொன்மையுற்றகாலத்தி லவை எழுதப்பெற்றிருக்கவேண்டும்.

பாரதயுத்தம் கி. மு 1400 முதல் 1000 வரை என்றகொள்கை யுடையார்க்கு கி. மு. 3000-த்தில் யுத்தம்நடந்ததென்றவிவரமானது புத்தருக்கும் யுத்தத்துக்கும்மத்தியில் 2500-வருஷங்கடந்தது என்றதை ஞாபகப்படுத்தி அது அசம்பாவிதம் என்பதைத்தோற்றுவிக்குமாயி னும், அவ்வளவுகால மிடையீடுற்றதென்பதுண்மைக்குமாறாகாது. மேற்கூறியபடி பாரதயுத்தம் 5000-வருஷத்துக்குமுன்பேநடந்ததுதா னென்பதைப் பின்வரும் ஆதாரத்தாலுங்காணலாம்.

II. தேசாந்தரிகளின் சரித்ரஆதாரம்.

1. சந்திரகுப்தன்சபையிலிருந்த ஒரு கிரேக்கஸ்தானுதிபதியாகிய மெகஸ்தனீஸ் என்பவன் இந்தியாவிஷயமாய் எழுதிவைத்தகிரந்தத்தைப்பார்ப்போம். அவன் எழுதியகிரந்தத்திற் பெரும்பான்மை நஷ்டமாய்ப்போனபோதிலும் இப்போது நமக்குக்கிடைத்திருக்கிற கிலபாகங்களிலிருந்து சிலவிஷயங்கள் இதுவிஷயமாய்த்தெரிந்து கொள்ளக்கூடியவாயிருக்கின்றன. சௌரசேனி ஜநங்களால்வணங்கப்படுமேவனென்று அதிற்கூறப்பட்டிருக்கிற 'இந்தியன் ஹெர்க்குலஸ்' என்பவனைஸ்ரீகிருஷ்ணனென்று நாம் ஒற்றுமைப்படுத்திக்கொண்டால் ஸ்ரீகிருஷ்ணனுக்கும் சந்த்ரகுப்தனுக்கும்மத்தியில் 138 தலைமுறை கடந்ததாகக்காண்போம். ஒருதலைமுறைக்கு 20-வருஷம் வைத்துப் பார்த்தால் மொத்தம் 2760-வருஷம். சந்திரகுப்தன் இற்றைக்கு 2212-வருஷத்துக்குமுன் இருந்தவனென்று நமக்குநன்றாய்த்தெரியும். இவற்றால்,பாரதயுத்தம் 5000வருஷத்துக்குமுன் நடந்ததென்ற வைதிக சம்ப்ரதாயப்பழங்கொள்கை வலியுறுகிறது என்பதாம். (Bombay Chronicle)

ஐரோப்பியபண்டிதர்கள் இந்தியபூர்விகநாகரிககாலங்களைக் கூடியவரை குறுக்கிக்கூறுவதிற் பேரவாவுடையவர்கள். பழைய இந்திய நாகரிகத்துக்கு மேற்குத்திக்கேகாரணமென்றகொள்கையுடையாராதலாற் கிரேக்கதேசத்தின் அத்யுந்நதநாகரிககாலமாகிய கி. மு. 1000-500-க்குப்பின்பே இந்தியபூர்விகத்தைநிறுத்தப்பிரியப்படுவர். அவர்களுக்குப் பாரதயுத்தகாலத்தை கி. மு. 3000-த்துக்குக்கொண்டுபோக மனமிராது. ஆனால் இந்த அபிப்பிராயம் இப்போது மாறிக்கொண்டு வருகிறது. கி. மு. 4000-த்திற்றான் மனிதன் பூவுலகில் முதன்முதற் சிருட்டிக்கப்பட்டானென்ற கிறிஸ்தவர்கள் யூதர்களின்கொள்கையானது, சாசனங்களாலும் பூமியில்வெட்டியெடுக்கப்படும்பொருள்களாலும், எகிப்தும் பாபிலோனியாவும் கி. மு. 4000-த்துக்குமுன்பே நாகரிகம்பெற்றதென்றும்,கடவுளால்வெளியிடப்பெற்றதென்றுபைபிளிற்கூறப்படும் "பத்துக்கற்பனை"ஏற்கனவே மிகவுமுந்தியகாலத்தில் ஓர் அரசனுற் சட்டமாக்கப்பெற்றிருந்தனவென்றும் வெளியிட்டிருக்கிற புராதனபரிசோதகர்களின் ஆராய்ச்சியாலும் தளர்ந்துகொண்டு வருகிறது. ஆகையால், புதுக்கொள்கைகளைத் திடீரென நாம் நம்பி விடக்கூடாது.

A. M. சடகோபராமாநுஜாசார்யர்,
திருச்சிராப்பள்ளி.

ஃ.

யசோதரகாவிய ஆராய்ச்சி.

"செந்தமிழ்" (தொகுதி-கஅ பகுதி அ-ல்) ௧0௧-ம் பக்கத்தொடர்ச்சி.

IV. இக்கதை, புதிய அச்சுப்பிரதியில் யசோதரன்சரித்திரம் என்ற தலைப்பிட்டுப் பெரிதும் நூலைத்தழுவியே இனியநடையில் விரிவாக எழுதப்பட்டுளது. ஆயினும், நாடு நகரம் உய்யானம் திருமணம் மணமகள் பள்ளியறை மைந்தன்பிறந்தகொண்டாட்டம் மூப்புவந்துற்ற அரசனதுமனத்தோற்றங்கள் அரசன் மகனைவிட்டுப் பிரியுங்கால் மகனுக்குக்கூறியபுத்திமதிகள், மற்றும் இவைபோன்ற விஷயங்களுள், காப்பியத்திற்காணப்படாத பலகற்பனைகள் கதையிற் சேர்க்கப்பட்டுள்ளன. இவைகளைப் புதியஅச்சுப்பிரதியில் XIII—XX, XXIII, XXXVIII—XXXIX, XLVI இப்பக்கங்களில் மிகுதியாகக்காணலாகும். அன்றியும், சிற்சிலவிடத்துப் பாடல்களின்வரிசைப்படியே விஷயங்களைக் கதையிலெழுதிவருங்கால், இடையில் மதசம்பந்தமானவிஷயங்களுள்ளிட்டுள்ள சிலபாடல்களின்கருத்துக்கள் சேர்க்கப்படாது முழுதும்விடப்பட்டுப்போயின. அப்பாடல்களிலடங்கியவிஷயங்களைத்தழுவியசங்கதிகள், ஜைனபரிபாஷைத் தொகைவிளக்க அகராதி என்ற தலைப்பிலும் காணப்படாமையின், அவைகள் நூல்வாசிக்கப்புகும் சாமானியர்களின்மனத்திற்கெட்ட வழியில்லை. உதாரணம்:—அமிருதமதிபடும் நரகத்துன்பங்களை நூலிலுள்ளவாறே எழுதிவருமிடத்து இடையிலுள்ள,

> "ஒருபதிளுெடொருபதினையுந்தியதனும்ப
> ரிருபதிளுெடைந்துவிலுயர்ந்தபுகையென்னும்
> பொருவரியதுயரினவைபொங்கியுடன்வீழு
> மொருபதிளுெடெழுகடல்களளவுமொளிதாரோய்"

என்றசெய்யுளின்கருத்துமட்டும் கதையிற்காணப்படவில்லை. நிற்க, கதையில்வந்துள்ளவிஷயங்களுள்ளும் சிற்சில, மூலபாடங்களோடொவ்வாது பொருண்மாறுபட்டிருக்கின்றன. இவைகளைக் கீழே காட்டுவோம்.

(1) " யானிவ்வாளினின்மக்களிரட்டையை
யீனமில்பலியாகவியற்றினல்
ஏனமானுடர்தாமிவ்விலங்கினி
லானபூசனையாற்றுதலாற்றெனை " I. 21.

இச்செய்யுளிலும் வடமொழிக்காவியத்திலும் மாரிதத்த அரசன் தான், இருவரைச் சண்டமாரிதேவிக்கு நரபலிகொடுத்துப் பூஜை செய்தபின்னர்க் காலதாமதமின்றி உடனே குடிகள் தாங்கொணர்ந் துள்ளவிலங்குகளைத் தேவிக்குப்பலிகொடுத்துப் பூஜைசெய்யக்கடவ ரென்று கூறினதாகவுளது. புதிய அச்சுப்பிரதியிலோ கீழ்வருமா றுளது.

"ஜனங்களே! நான் பின்பு எனதுவெற்றிவாளினுல் அழகியவடி வமைந்த இரண்டுமானிடரைப் பலிகொடுத்துப் பூஜைசெய்வேன். நீங் கள் விலங்குஜாதிகளின்பூஜையை முதலில்நிறைவேற்றக்கடவீரென்று அரசன் அங்குவந்துள்ள தன்பிரஜைகளுக்குக் கட்டளையிட்டனன்"

(2) "ஆடவரின்றுமேலாலருவருத்தணங்கனுரைக்
கூடலர்துறந்துநோன்மைக்குணம்புரிந்துயர்தற்காகப்
பீடுடையயனுற்றந்தபெருமகளிவளென்றுள்ளே
தோடலர்குழலிதோழிதுணிந்தனள்பெயர்ந்துசென்முள்" II. 37.

இச்செய்யுளில், குணவதியென்னுந்தோழி, அரசியாம் அமிருத மதியின்மதி களவொழுக்கத்திற்சென்றதைநினைந்து"இன்றுதொட்டு ஆடவர்கள் பெண்பாலாரைவெறுத்துத் துறந்து நற்கதிபெறுமாறு பிரஹ்மதேவனுற்படைக்கப்பெற்றபெருமகளேயாவளிவளென மனத் திற்கொண்டு அவ்விடம்விட் டகன்றனள்" என்றுகூறப்பட்டுளது. அச்சுப்பிரதியில் இச்செய்யுளின்பொருள் அடியில்வருமாறுளது.

"பிரமன் இவளுக்கு இணையில்லாத போகபாக்கியங்களையும் செல்வ மிகுதியையும் பதவியையுமளித்தும், இவளதுபுத்தியைமட்டும் ஈன மாக்கிய தந்தோ கொடிதுகொடிதென்று பலவாறுநினைந்து ஒருவாறு தனக்குள்ளேநொந்துகொண்டு (தோழி) செல்லுகையில்......" என் றுளது.

ஆடவரன்றி மேலார் எனப் பாடங்கொள்ளினும், "சாமானியர்களல் லாது அறிவுடையோராகிய ஆண்மக்கள்" என்று பொருள்கூறுதல்

பொருத்தமுடைத்தாம். பெயர்த்துச்சென்றாள் என்பது அச்சுப்பிரதிகளிற்கண்டபாடம்.

(3) "ஆயிடையரசனுள்ளத்தரசினைவிடுப்பவெண்ணித்
தாயமர்கோயிலெய்திச்சந்திரமதிதன்முன்னர்ச்
சேயிடையிறைஞ்சமற்றித்திரைசெய்நீருலகமெல்லா
நீயுயர்குடையின்வைகிநெடிதுடன்வாழ்கவென்றாள்" II. 54.

இச்செய்யுளில், யசோதரராஜன் அரசியலைநீத்துத் துறவுகொள்ள எண்ணங்கொண்டவனாய்த் தன்தாயாம் சந்திரமதியின் அரமனைக்குச் சென்று அவளது அடிபணிந்துநின்றனன். நிற்கவே, தாய் அவனை நோக்கிக் கடல்சூழ்ந்தஇப்பூவுலகனைத்தினையும் நீ ஒருகுடைக்கீழாக்கி உன்குடைஓங்க நீடூழியாண்டுவாழ்வையாகவென்றனள்" என்றுகூறப்பட்டுளது. வடமொழிக்காவியத்தும் இக்கருத்துத்தானுளது.

அச்சுப்பிரதியில், "இறைஞ்சி.........வாழ்கவேன்றான்" எனப் பாடங்கொண்டு, "அரசன்......தன்தாய் சந்திரமதிக்கு அறிவிக்கலாமென்று அவளிருந்த அரமனைக்குச்சென்று அவளைக்கண்டு விலகிநின்று இக்கடல்சூழ்ந்தபுவியை நீயேயாளுவாயாகவென்றனன்" என்றுளது.

(4) "விண்ணிடைவிளங்குங்காந்திமிகுகதிர்மதியந்நீங்தே
மண்ணிடைமழுங்கச்சென்றோர்மறையிருட்பகுதிசேரக்
கண்ணிடையிறைவிகங்குற்கனவினிற்கண்டதுண்டஃ
தெண்ணிடையுள்ளந்தன்னுளீர்ந்திடுகின்றதென்றான்" II. 56.

இச்செய்யுளில், யசோதரராஜன் ஒருபொழுதும் சந்திரனைவிட்டு நீங்காதநிலவேபோல எப்பொழுதும் தன்னைவிட்டகலாது தன்னுடன் ஆகாயமளாவியமாளிகையில்வீற்றிருந்த தன்மனைவியாம் அமிருதமதி, ஒருநாளிரவினில், தன்னைவிட்டுநீங்கி ஒளிமழுங்கித் தரையிற்சென்று, கண்கொண்டுகாணவொண்ணாதகாரிருளேபோன்று கறுத்தமேனியனும் யானைப்பாகனுடன்கூடிக்கலந்திருக்கக்கண்டு மனம்புழுங்கி, அதனை உள்ளவாறு வெளிப்படையாகத் தன்தாயினிடத்துச்சொல்லாது மறைபொருளாகக்கூறுகின்றான் என்று கூறப்பட்டுளது.

இ-ள் "அன்னாய்! ஆகாயமார்க்கத்தில்விளங்குஞ் சந்திரகாந்திகிரணங்களால்நிறைவுற்றசந்திரனைவிட்டுநீங்கி ஒளிமழுங்கித் தரையிற்சென்று, ஆங்குத் தன்னைமறைக்கவல்லதோர் இருட்பகுதியுடன்

இரவிற்சேர்ந்திருக்கக் கனவினிற் கண்ணுரக்கண்டேன். அங்ஙனங் கண்டது என்னுள்ளத்தினை வாள்கொண்டறுக்கின்றது என்றான்” என்பதாம். இங்கு இறைவி என்றது தாயை. புதிய அச்சுப்பிரதியில் மேலேயுள்ளசெய்யுளின்பொரு ளடியில்வருமாறுகாணப்படுகின்றது.

“வாராய்தாயே! ஒருநாளிரவில் நான் நித்திரைபுரிந்தபோது இரண்டுதீயகனவுகள்கண்டேன். சந்திரனுடையகாந்தியாம் ரோகிணீதேவி சந்திரனை விட்டு நீங்கி மண்ணிடைமழுங்கியதாகக்கண்டதொன்று. இருளுக்கேதுவாகியமேகபடலம் அப்பொழுது சூரியனை மறைத்ததாகக்கண்டது மற்றொன்று. இவ்வாறுகண்டதுமுதற்கொண்டு மனத்துயரால் என்சரீரம்முதலியன மாறிவிட்டன என்றனன்” எண்ணுடை என்பது அச்சுப்பிரதியிற்கண்டபாடம்.

வடமொழிக்காவியத்து மூன்றாவதுசருக்கத்துப் பதினொன்றாவது பன்னிரண்டாவது சுலோகங்களிற்கூறியபடியே மேலே எழுதியுள்ளசெய்யுள் அமைக்கப்பெற்றுளது. அச்சுலோகங்கள் கீழ் வருமாறு:—

“கிம் தாத காஞ்சிதவதேஹ்ய ப்ருஶாங்க
விஹ்ருதம் காவமயோஜிதமக்ஷீஷ்ட ।
வ்ருக்ஷேத்ய தாத பயா நிஶி த்ருஷ்டா
தேவி ஸம்பகரீ திதிரேண ॥ 3. 11.

தாத்ருஶம் தாத ஸக்ருத்வ்யாபபூவம்
ஜந்தீம ந பயா ஸ்வபதாவீ ।
தத்வாநபிநவஷி கீக்ஷிதபாதெத்யு-
த்விஷ்டாம் விதநோதி பப த்வம்வஷ்டு” ॥ 3. 12.

(5) “கொலைவினதின்மைகூடார்குவலயத்திறைமைசெய்யு
மலைதலில்வாய்மையார்க்கும்வாய்மொழிமதிப்பையாக்கும்
விலையிலபொருளின்மாட்சிவிளைப்பதுகளவின்மீட்சி
யுலைதலில்பெருமைதிட்பமுறுவலியொழிந்ததீயும்” IV. 18.

“தெருளுடைமனத்திற்சென்றுதெளிந்துணர்வாயசெல்வம்
பொருள்வயினிறுக்கமின்மைபுணர்த்திடும்புலசுதேன்க
ளொருவியபயனுமஃதேயொளியிறேடழகுவென்றி
பொருண்மிகுகுலனேடின்பம்புணர்தலுமாகுமாதோ” IV. 19.

கொலையினது இன்மை - (ஹிம்ஸாயா: அஹிம்ஸா) கொல்லாமை. களவின்மீட்சி-கள்ளாமை. ஒழிந்தது-(கொல்லாமை பொய்யாமை கள்ளாமை இவ்வொழிந்தது) காமத்தை ஒல்லாமை. இறுக்கம் - பசை ; பற்று. பொருள்வயினிறுக்கமின்மை-(விஷயேஷு ஸங்கேஷு, விஷயேஷு ஸக்தேஷு, அபரிக்ரஹ இதி ஸாவ:) பொருள்களிடத்துப் பற்றில்லாமை. கூடார்குவலயத்து - ஒருவருக்கொருவர் பகையாயார்நிறைந்த இப்பூவுலகத்து.

இ - ள் கொல்லாமை, பகைநிறைந்த இவ்வுலகத்து எங்கும் பிணக்கின்றி இணக்கமுற்ற மேலானவாழ்வைத்தரும். விபரீத வேறுபாடுகளுக்கிடமின்றி உண்மைபேசுதல், வாய்மொழியில் மேலானமதிப்பையுண்டுபண்ணும். கள்ளாமை, நேர்மைகாரணமாக விலையேறப்பெற்ற செல்வப்பொழிவைத் தானேகொணர்ந்துசேர்க்கும். காமத்தையொல்லாமை, மேனுக்குமேல் தேகவலுவையும் மனவுறுதியையும் சொல்வன்மையையும் தரும். பொருள்களினிடத்து அவாவின்மை, கலக்கமற்றமனத்தின்கண், தெளிந்தநல்லறிவினைத் தந்து பழம்பிறப்புணர்ச்சியையும் வரும்பிறப்புணர்ச்சியையும் தரும். மதுமத்திய மாம்ஸங்களையுண்ணுதுவிலக்கல், ஒளி அழகு வெற்றி நல்லகுடிவாழ்க்கை இன்பம் ஆதிய பலவகைநன்மைகளைப்பயக்கும் என்பதாம்.

இச்செய்யுட்களிற் பாதஞ்சலயோகநூலினும் வடமொழியசோதரகாவியத்தும் சொற்றவாறு, கொல்லாமை பொய்யாமை கள்ளாமை காமத்தையொல்லாமை பற்றறுத்தல் ஆகிய இவ்வைந்துவிரதங்களுள் ஒவ்வொன்றினுலுமமையும்பயன்களும், வடமொழியசோதரகாவியத்துச் சொற்றவாறு ஊன் தேன் கள் ஆகிய இம்மூன்றினையுமுண்ணுது விலக்குவதனுலமையும் பயன்களும் கூறப்பட்டுள்ளன. பாதஞ்சலயோகநூலிற்கண்ட சூத்திரங்களும் வடமொழிக்காவியச் சுலோகங்களும் அடியில்வருமாறு:—

“அஹிம்ஸாப்ரதிஷ்டாயாம் தத்ஸந்நிதௌ வைரத்யாக:। 2 அத். 35 சூத்திரம்.
ஸத்யப்ரதிஷ்டாயாம் க்ரியாபலாச்ரயத்வம்। ௸ 36 ௸
அஸ்தேயப்ரதிஷ்டாயாம் ஸர்வரத்னோபஸ்தானம்। ௸ 37 ௸
ப்ரஹ்மசர்யப்ரதிஷ்டாயாம் வீர்யலாப:। ௸ 38 ௸
அபரிக்ரஹஸ்தைர்யே ஜன்மகதந்தாஸம்போத:। ௸ 39 ௸

இ - ள் ஒருவனிடத்துக் கொல்லாமையென்பது நிலைநிற்குமாயின், அவனைக்கண்ட அளவில் எல்லாப்பிராணிகளும் பகை ஒழிந்துநிற்கும். வாய்மைநிலைநிற்குமாயின், முயற்சியின்றி எல்லாக் காரியமும் அவன் ஆகவெனில் ஆகும்; அவனதுவாய்ச்சொல் ஒருபொழுதும் வீண்போகாது. கள்ளாமையென்பதுநிலைத்திருக்குமெனின், அவன்விரும்பாமலே எத்திசையிலுள்ள இரத்தினங்களும் தாமாகவே அவனிடம்வந்துசேரும். பழுதில்லாத நித்தியப்பிரஹ்மசரியம் ஒருவனிடத்திருப்பின், அது ஒப்பில்லாததேகவலுவையும் மனவுறுதியையும் சொல்வன்மையையும்நல்கும். அபரிக்கிரகம் (சரீரமுதலாம் எல்லாவிதபோகஸாதநங்களுள்ளும் பற்றில்லாமை) முற்பிறப்பினையும் இப்பிறப்பினையும் இனிவரும்பிறப்பினையும் அவைகளுக்கானகாரணங்களையும் தெளிவுற உணரச்செய்யும் என்பதாம்.

𑌅𑌹𑌿𑌂𑌸𑌨𑌾𑌦𑍍𑌵𑍈𑌰𑌹𑌾𑌰𑌂 𑌪𑌾𑌰𑌂 𑌹𑌿 𑌵𑌚𑌃
𑌕𑌰𑍋𑌤𑌿 𑌸𑌤𑍍𑌯𑌂 𑌕𑍍𑌷𑌣𑌤𑍋𑌽𑌵𑌭𑌾𑌸𑍍𑌯𑌤𑌾𑌮𑍍 ।
𑌅𑌸𑍍𑌤𑍇𑌯𑌨𑌿𑌷𑍍𑌠𑌾 𑌕𑍍𑌷𑌿𑌤𑌿𑌰𑌤𑍍𑌨𑌸𑌂𑌚𑌯𑌂
𑌫𑌲𑌾𑌵𑌹𑌾 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌚𑌰𑍍𑌯𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌿𑌤𑌾 ॥ 4. 26.

𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌯 𑌪𑍂𑌰𑍍𑌵𑌾𑌪𑌰𑌕𑍋𑌟𑌿𑌸𑌾𑌕𑍍𑌷𑌿𑌣𑍀
𑌸𑌰𑍍𑌵𑌤𑍍𑌰𑌪𑍂𑌰𑍍𑌣𑌾𑌪𑍍𑌰𑌤𑌿𑌭𑌃 𑌪𑍍𑌰𑌵𑌰𑍍𑌤𑌤𑍇 ।
𑌤𑍍𑌯𑌜𑌨𑍍𑌤𑌿 𑌸𑌰𑍍𑌵𑍇 𑌯𑌤𑌯𑍋𑌽𑌸𑍍𑌯 𑌶𑌙𑍍𑌕𑌂
𑌪𑍍𑌰𑌚𑍇𑌤𑌸𑌃 𑌪𑍂𑌜𑍍𑌯𑌂 𑌵𑌿𑌶𑍍𑌵𑌸𑍍𑌥𑌿𑌤𑌸𑍍𑌮𑌰𑌃 ॥ 4. 27.

இ - ள் எவருக்குந் தீங்குபுரியாமை, பகையைத்தவிர்ப்பதற்கான சிறந்தவழியாகும். மெய்பேசுதல், சொன்னசொற்பழுதாகாது பயனுறச்செய்யும். கள்ளாமை, எல்லாத்திசைகளினின்றும் விலையுயர்ந்தபொருள்களைக்கொணர்ந்துசேர்க்கும். சிறந்ததாம் பிரஹ்மசரியம், நல்லதேகவலுவையும் மனவுறுதியையும் சொல்வன்மையையும்பயக்கும். யானெனதென்னும்பற்றுத்துறந்தநோன்புடையாருக்குக் கழிந்தனவும் வருவனவுமாம்பிறப்புக்களின் உணர்ச்சியுண்டாம். தாங்கொண்ட எல்லாவிரதங்களும் நன்குவளர்வதிற்கண்ணுயினராகிய பெரியோர் மதுமத்தியமாம்ஸங்களை யுண்ணுதுநீக்குவர் என்பதாம்.

இவ்வாறிருக்க, புதிய அச்சுப்புத்தகத்தில் மேலேயுள்ள இரண்டு செய்யுள்களுக்கும் கீழ்வருமாறு மாறுபடப் பொருள்கூறப்பட்டுளது:—

"ஒருவனிடம் கொலையென்பதொன்றில்லையாயின், அவன் இவ்வுலகில் மேலானநிலையையடைவான். அதுவே பொய்யணுகாச் சத்தியநிலையை அளிக்கும். அந்தச் சத்தியவான்வாய்மொழியோ எல்லோராலும்மதிக்கப்படும். ஜீவகாருணியத்தின்மாட்சியோ பிறர் பொருளைக்களவுசெய்தலைநீக்கும்; இதன்றிப் பெருமையையும் மனத்திடத்தையும் சரீரதிடத்தையும் மற்றவைகளையும் அளிக்கும். மனத்தின்தெளிவால் உணர்தலென்னும் செல்வம்வாய்த்தாற் பொருளைத் தாராளமாய்ச்செலவிடச்செய்யும். இவற்றின்முதிர்ச்சி, புலால் தேன் கள் இவைகளைத்தவிர்க்கும். தேககாந்தி, அழகு, வெற்றி, செல்வம்மிக்கதுலம் இன்பநுகர்ச்சி இவைகளும் உண்டாம்"

கூரார்குவலயத்து, வாய்மையாக்கும், விலையில்பொருளின், மனத்திற்சென்ற, புணர்ந்திடும் இவைகள் அச்சுப்புத்தகத்திலுள்ள பாடங்கள்.

(6) "நாவழுகிவீழ்முழுதுநஞ்சுணமடுத்தா
ளாவலறியதுவுருகியலமரினுமையோ
சாவவரிதிவணரசிதகல்வினைதருநோ
யாவும்விளைநிலமதனிலினியவுளவாமோ" IV. 66.

இ-ள் நரகத்துவீழ்ந்த அமிருதமதி ஆங்கு நாமுழுதுமழுகிவீழும் நஞ்சுணவை உண்டனள். உண்ணவே நாவுருகி முழுதுமழுகிவிழக் கோவென்றலறி அலமந்தனளாயினும், அவள் ஆங்குச் சாவதில்லை. ஐயோ, பாவம்! என்செய்வாள். வெய்யதீவினைகளின் பயன்களாம் துன்பங்கள்யாவும்விளையுமிடமாம் நரகத்திடத்து இனிதெனத்தோன்றுவதெதுவும் அணுகாதுவிலகிநிற்குமன்றே? என்பதாம்.

அச்சுப்புத்தகத்தில், "உணவில்நஞ்சுபெய்துகோல்வித்தவள் முழுதுமழுகிவிழும்நாவாலலறவே, அந்நாவுமுருகிவருந்தினும் அவளிங்குச் செத்தொழிவதில்லை. துயருள் அழுந்துபவளேயாம்......" என்றுளது.

(7) "திலப்பொறியிலிட்டனர்திரிப்பவுநெருப்பி
னுலைப்பெருகழற்றலையுருக்கவுமுருத்துக்
கொலைக்கழுவினிட்டனர்குலைப்பவுமுருக்கு
முலைப்பருவருத்தமதுரைப்பரிதுகண்டாய்" IV. 66.

இச்செய்யுளில், "எள்ளாட்டுஞ்செக்கிலேயிட்டு அரைப்பர்; நெருப்பினுலையிலேயிட்டு எரிப்பர், உருக்குவர்..............." என்றிருக்க, அச்சுப்புத்தகத்தில் "எள்ளாட்டுஞ்செக்கிலிட்டுத்திரிப்பார்கள். நெருப்புலையில், காலையும் தலையையும்வைத்தெரிப்பார்கள். உருக்குவார்கள்" என்றுளது. பெருகழற்றலையென்றதனைப் பெரிய கழல் தலையென்று பிரித்தனர்போலும்.

(8) "வெய்யதீவினைவெருவுறுமாதவம்விதியினினிறுதிகொண்டா
னையதாமதிசயமுறவடங்கினனுடம்பினையிவணிட்டே
மையல்வானிடையனசனற்குழாங்களில்வானவன்றாகித்
தொய்யின்மாமுலைச்சுரவரர்மகளிர்சந்தொகுதியின்மகிழ்வுற்றான்" 4—96.

இ - ள் மாரிதத்தஅரசன், வெந்துயர்களுக்கிடனாம் தீவினைகளெல்லா மஞ்சித் தன்னைவிட்டொழியுமாறு மாதவத்தினை முறையினின்முடிவுறச் செய்துமுடித்தனன். பின்னர் யாவருமதிசயமுற உடம்பினை இப்பூவுலகில்விட்டொழித்து, வானுலகின்கட் போகநுகருமுலகங்களுக்கிடையனவாகவுள்ள சனற்குமாரகற்பங்களெனப்படும் மூன்றாவதுதுறக்கப்புரையிற்சென்று தேவனாகி, ஆங்குள்ள தேவமகளிருடன் இன்புற்றுவாழ்ந்தனன் என்பதாம். மையல்வான் என்றது மயக்கவிருள்கெடாது, போகங்களைநுகரும் கற்பங்களெனப்படும் மேலுலகங்களை; அஃதென்னையெனில், கற்பாதிமுதற் கற்பாந்தமுறச்சென்றவர்கள் பற்றுடையராதல்பற்றி. இடையன - இடையினுள்ளனவாகிய. சனற்குழாங்களில் - மூன்றாவது சொற்கமாகிய சனற்குமாரகற்பத்துள்ள தேவர்குழாங்களுள். வானவன்றாகி - தேவனாகி.

कायवाक्सम्बन्धः ... (Grantha line, partly illegible) ।

தத்துவார்த்தசாஸ்திரம். அத். 4. சூத். 7.

வ்யா:-காயேந ப்ரவீசாரோ மைதுநவிஷயஸேவநம் யேஷாம் தே காயப்ரவீசாரா:। பவநவாஸ்யாதய ஐசாநாந்தா: ஸம்க்லிஷ்டகர்மாணோ மநுஷ்யவத் ஸ்த்ரீவிஷயஸுகமநுபவந்தி।

சேஷா: ஸ்பர்சரூபசப்தமந:ப்ரவீசாரா:।

தத்துவார்த்தசாஸ்திரம். அத். 4. சூத். 8.

வ்யா:- ஸாநத்குமாரமாஹேந்த்ரயோர்தேவா தேவ்யச்ச ஸ்பர்சப்ரவீசாரா:।
ப்ரஹ்மப்ரஹ்மோத்தரலாந்தவகாபிஷ்டேஷு ரூபப்ரவீசாரா:।
சுக்ரமஹாசுக்ரசதாரஸஹஸ்ராரேஷு சப்தப்ரவீசாரா:।
ஆநதப்ராணதாரணாச்யுதேஷு மந:ப்ரவீசாரா:।

பரேऽப்ரவீசாரா:।

தத்துவார்த்தசாஸ்திரம். அத். 4. சூத். 9.

வ்யா:- பரே க்ரைவேயகாதயோ தேவா: ஸர்வே அப்ரவீசாரா:। ப்ரவீசாரோ ஹி வேதநாப்ரதீகார:। ததபாவே, தேஷாம் பரமஸுகமநவரதம் பவதி।

இ - ள் "கீழ் முத்தேவராகிய பவணர் வியந்தரர் ஜ்யோதிஷ்கர்களும், சௌதர்மேசானகற்பத்தார்களும், இப் பூவுலகத்தாரைப் போன்று சரீரஸம்யோகத்தாற் காமநுகர்ச்சியடைவர். சனற்குமார-மாஹேந்திரகற்பத்துத்தேவர்களும் தேவியர்களும் சரீரஸம்ஸ்பரிசத்தாலும், பிரஹ்ம-பிரஹ்மோத்தர-லாந்தவ-காபிஷ்டகற்பத்து ஒருவரையொருவர் கண்கொண்டுகொண்டவினலும், சுக்கிர-மஹாசுக்கிர-சதார-ஸஹஸ்ராரகற்பத்து ஒருவர் மற்றொருவரின்குரலோசையையும் பாட்டோசையையும் செவிக்கொள்வதனாலும், ஆனத-பிராணத-ஆரண-அச்சுதகற்பத்து ஒருமனப்பட்டுச் சிந்தைமேவலினாலும் அவ்விதநுகர்ச்சியடைந்தாராவர். இவர்களுக்கும்மேலோராகிய கிரைவேயகாதியராம் தேவர்கள்யாவரும் காமநோயற்றோராதலின்,

அவர்களுக்கு அவ்வழியினுலாகிய இன்பமேவேண்டுவதில்லை. அவர்கள் இடையறுது பரமானந்தத்தையே நுகர்வாராவர்'' என்பதாம்.

இதேகருத்து அடியில்வருஞ்செய்யுட்களிலுங் காணலாகும்.

“மிடையின்மேனியைத்தீண்டலிற்காண்டலி
லடையுமின்சொலிற்சிந்தையின்மேவலின்
மடநலாரின்வரும்பயனெய்துவர்
அடைவிலோதியிற்சொன்னமுன்னவரும்” மேருமந்தரபுராணம், 503.

“ மோகமின்முனிவனிதின்பம்போலவே
தோகையையனையவர்தொடர்ச்சியின்றியே
சோகமோடுறுதுயரின்றித்தானியல்
பாகுநல்லகமிந்திரத்தவரின்பமே” மேருமந்தரபுராணம், 505.

மேலேகுறித்தயசோதரகாவியச்செய்யுள், அடியில்வரும் வடமொழிக்காவியத்துச்சுலோகத்தின்வழியே அமைக்கப்பெற்றதாகும்.

‘‘விக்ஷ்யாமயேத்ர ஸாவிரம் ஸாஸாவ ந்ருயாநேந
தஸ்வா தவஸ்து வஹிரஷரிதி ஷ்வெஹஷ்ழ ।
த்ருஷ்ணா ஸஜோயிவியினா தநாஜோயாஸ்நெஜ
தேவோऽவவ ஸ்த நூவகிஷ்ஷ்வெ த்ருதீயெ॥”4 ஸ. 69 சு.

இ-ள் அவ்வரசன் குருவின்சந்நிதானத்து நெடுநாளிருந்து மோக்ஷவித்தையைக்கற்றுணர்ந்து, அகத்தவம் புறத்தவமெனப்படும் இருவகைத்தவங்களேயுஞ்செய்துமுடித்து, நிர்யாணகாலத்திற் சமாதிமுறைப்படி சரீரத்தைக்களேந்தொழித்துவிட்டு மூன்றுவதுசொர்க்கத்துத் தேவனுயினுன் என்பதாம்.

புதிய அச்சுப்புத்தகத்தில், விதியினின்றுதிகோண்டான், வனசனற்குழாங்களில் எனப் பாடங்கொண்டு, ‘‘தவநெறியில் இவன் பன்னுள் வழுவாதுநின்று எண்குணனேத்துதிசெய்து பூதவுடலை இம்மண்ணிடை நீத்து விண்ணுலகிற் றேவர்குழாங்களில் தலைமைபெற்றுத் தேவமடந்தையர்களதுகுழுவிற் களிகொண்டுவிளங்கினுன்” என்றுளது. நிற்க, வனசனற்குழாம், தாமரையிற்பிறந்த பிரமனதுபதம்பெற்ற நல்ல

கூட்டம்; அனசனர்குழாம் எனப் பாடபேதங்கொள்ளின், மனிதர் போல அசனமுட்கொள்ளாத தேவர்களதுகூட்டம்” என அரும்பத வுரையென்ற தலைப்பின்கீழ்க் காட்டப்பட்டுளது.

(9) “ காளைதருகல்யாணமித்திரனெனும்பே
ராளியடுதிறல்வணிகனரசனுயிரனையன்
கேளொருவன்வந்திடைபுகுந்தரசகெட்டேன்
வாளுருவுகின்றதுவென்மாதவன்முனென்றான் ” 4—41.

இச்செய்யுளில், கல்யாணமித்திரனெனும்வணிகன் அரசன துயிர்த்தோழனெனக்கண்டிருக்க, அச்சுப்புத்தகத்தில் “அம்முனிவர ரின்மித்திரனும் ஜினதருமபரிபாலகனுமாகிய கலியாணமித்திரனெனப் பெயர்கொண்ட வணிகச்சிரேட்டி” என்று கண்டுளது. உயிரனைய என்பது அச்சுப்பிரதியிற்கண்டபாடம்.

(10) “ மாசின்மாமணிமேனியின்வாசமோரோசனைமணநாறத்
தேசொரோசனைதிளைத்திடமுளைத்தெழுதினகரனனையார்கள்
ஆசிலெண்குணனவதியொடமைந்தனரலைகடலளவெல்லாம்
ஏசில்வானுலகிணையிலின்பத்தினிலிசைந்துடனியல்கின்றார். IV. 100

இ-ள் அபயருசியும் அபயமதியும் ஓரோசனைதூரம் நறுமண மும் இளஞ்சூரியனையொத்துத் திகழொளியும்வீசும் நிர்மல திவ்ய தேகத்தோடு ஈசாநகற்பத்திற்சென்று, முற்பிறப்புக்களில்நிகழ்ந் தனவாம் சங்கதிகளையெல்லாம்நினைவுகொண்டு எண்குணனதுதிரு வறத்தினில் மாறாதமனத்தினராய், அச்சொர்க்கத்து நீண்ட ஆயுளள வாகிய (இரண்டு) கடற்காலவளவும் இணையிலாதவின்பத்தினை இடை யறாதுநுகர்ந்து மகிழ்வுற்றுவாழ்கின்றனர் என்பதாம்.

அவதி (அவதி:) அவதிஞ்ஞானம்; (அல்லது) அவதானம். “அவதிஸ்த்வவதானே ஸ்யாத் ஸீமாகாலபிலேஷுச।” மேதினீ கோசம். மேலேயுள்ளசெய்யுள் அடியில்வரும் வடமொழியசோதர காவியச் சுலோகத்தைத்தழுவியே எழுதப்பட்டதாகும்.

“[illegible]

[illegible]

[illegible]

[illegible]”

IV. 71.

([illegible])

இ-ள் தேவமகளிர்காதலித்து இளமுறுவல்கொண்டுநோக்க, இளஞ்சூரியனதுதிகழொளியைக்கொண்ட திவ்யதேகத்தையுடையராய்த் தாங்கற்கரிய கடியபெருந்துன்பங்கள்நிறைந்த பிறவிக்கடலினின்றுவெளியேற்றும் அருகக்கடவுளதுதிருவடிகளில் மாறாதநினைப்புடையராய், (அபயருசியும் அபயமதியுமாகிய) அவரிருவரும் இமயவருலகத்திலிருந்து இணையில்லாத பரமசுகத்தை அனுபவித்து மகிழ்வுற்றுவாழ்கின்றனர் என்பதாம்.

இவ்வாறிருக்க, அச்சுப்பிரதியில் மேலேயுள்ள தமிழ்ச் செய்யுளின்பொருள் கீழ்வருமாறுளது.

“இவர்களது திவ்யதேகத்தின் மணம் ஒருயோசனைதூரம் வீசியது. சரீரகாந்தியும் ஒருயோசனைதூரம் எட்டியது. உதித்தெழும் கதிரவன்போன்றுவிளங்கும் பதம்பெற்றமுனிவர்கள்பலரோடு இணையில்லாதபேரின்பநிலையத் திவர்கள் விளங்கிக்கொண்டிருக்கின்றார்கள்”

(தொடரும்)

T. S. குப்புஸ்வாமிசாஸ்திரி.

ஆங்கிலத்தமிழ்ப்பரீக்ஷைத் தேர்ச்சிக்குறிப்பு

மதுரைத்தமிழ்ச் சங்கத்தார் 1915-ம் ௵ மார்ச்சு ௴ 6-ம் தேதியில் நடாத்திய ஆங்கிலகலாசாலைத் தமிழ்ப்பரீக்ஷைகளிற் றேறிப் பரிசும் யோக்கியதாபத்திரமும்பெறும் மாணாக்கர்களின் விவரம்.

யப். ஏ. பரீக்ஷை.

I-வது வகுப்பு.

தொடர்ச்சி நெ. ரிஜிஸ்டர் நெ.

1. 30. V· S. அருணாசலம், ஸ்காட்கிறிஸ்தவ காலேஜ், நாகர் [கோயில்.

(முதற்பரிசு ரூ 40 பெறத்தக்க தங்கப்பதக்கம்.)

2. 8. A. விஸ்வநாதன், S.P.G. காலேஜ், திருச்சினாப்பள்ளி.

(இரண்டாவது பரிசு ரூ 35.)

3. 22. P. தியாகராஜன், ஸெண்ட் ஜோசப் காலேஜ் திருச்சி [னாப்பள்ளி.

(மூன்றாவது பரிசு ரூ 30.)

II-வது வகுப்பு.

1. 7. E. S. வரதராஜன், S. P. G. காலேஜ், திருச்சினாப் [பள்ளி.

2. 16. K. M. தங்கபெருமாள் பிள்ளை. ஷை ஷை

3. 11. V. ஆசிர்வாதம், ஷை ஷை

4. 37. M· V. வேதாந்ததேசிகன், பிண்டிலேகாலேஜ், மன்னார் [குடி.

5. 6. B. A. சுப்பிரமணியன், S.P.G. காலேஜ், திருச்சிறுப்
[பள்ளி.
6. 12. A. S. இராமச்சந்திரன், ஷை ஷை
7. 36. V. இராமசாமி, வெஸ்லிகாலேஜ், ராயப்பேட்டை,
[சென்னை.
8. 14. N. சுப்பராயன், S.P.G. காலேஜ், திருச்சிறுப்பள்ளி.
9. 26. S. ஜம்புநாதன், ஸெண்ட்ஜோசப் காலேஜ் திருச்சிறுப்
[பள்ளி.
10. 5. N. சுவாமிநாதன், S. P. G. காலேஜ், திருச்சிறுப்
[பள்ளி.
11. 17. P. S. அலாவுதீன், ஷை ஷை
12. 15. K. P. நாராயணசாமி, ஷை ஷை

மெற்றிக்குலேஷன்.

I-வது வகுப்பு.

1. 98B. T. P. பழனியப்பன், நாஷனல்ஹைஸ்கூல், திருச்சி
[றுப்பள்ளி.
(முதற்பரிசு ரூ 30. வெள்ளிப்பதக்கமும், மீதம் ரூபாவும்.)
2. 329. S. வையாபுரி, பிண்டிலேகாலேஜ், மன்னார்குடி.
(இரண்டாவது பரிசு ரூ 25.)
3. 203. S. P. இப்ராஹிம், ஸெண்ட்மிக்கேல்ஸ் ஹைஸ்கூல்,
[கோயம்புத்தூர்
(மூன்றாவது பரிசு ரூ. 20.)
4. 245. T. B. நடராஜபிள்ளை, வூரீஸ்காலேஜ், வேலூர்.
(நான்காவது பரிசு ரூ. 15.)

II-வது வகுப்பு.

1. 226. M. N. சாம்பமூர்த்தி, கலியாணசுந்தரம் ஹைஸ்கூல்,
[தஞ்சாவூர்.

2. 161. A. தோரா அன்னம்மாள். (பெண்) மஹாராஜாஸ் பெண் [பாடசாலை, திருவனந்தபுரம்.
3. 96. M. கோவிந்தராஜன், S. P. G. ஹைஸ்கூல், திருச்சி [ருப்பள்ளி.
4. 297. V. A. தியாகராஜன், S. P. G. ஹைஸ்கூல் Vepery [சென்னை.
5. 202. K. M. சுந்தரமூர்த்தி, ஸெண்ட்மிக்கேல்ஸ் ஹைஸ்கூல், [கோயம்புத்தூர்.
6. 160. J. பத்மினி (பெண்) மஹாராஜாஸ் பெண்பாடசாலை, [திருவனந்தபுரம்.
7. 154. K. S. வெங்கடசுப்பிரமணியன், ஹைஸ்கூல், பத்த- [மடை
8. 208. S. அண்ணாமலை. ஸெண்ட்ஜோசப் ஸெக்கண்டரி ஸ்கூல் [கூடலூர்.
9. 326. G. இராஜகோபாலபிள்ளை, போர்டு ஹைஸ்கூல், திரு [வாரூர்.
10. 174. C. அருணாசலமுதலி, முனிசிபல் காலேஜ், சேலம்.
11. 170. R. V. நரசிம்மன், முனிசிபல் காலேஜ், சேலம்.
12. 159. S. சுப்பையன், ஸ்காட்ஸ்கிறிஸ்தவகாலேஜ், நாகர்கோ [யில்,
13. 303. G. C. தேவதாசன் S. P. G. ஹைஸ்கூல், Vepery. [சென்னை.
14. 330. K. இராஜகோபாலன், பிண்டிலேகாலேஜ், மன்னார்குடி.
15. 175. S. M. ஆமத்ஷரீப்சாஹிப், முனிசிபல்காலேஜ், சேலம்.
16. 282. A. நாராயணசாமி, முத்தியால்பேட்டை ஹைஸ்கூல், [சென்னை.
17. 138. V. ஸ்ரீநிவாஸன், St. Francis Xavier's High School [Palamcottah.
18. 227. V. மஹாலிங்கம், கலியாணசுந்தரம் ஹைஸ்கூல், தஞ்சா [வூர்.

19. 124. M. V. சுப்பிரமணியன், C.M.S. காலேஜ், திருநெல் [வேலி.
20. 247. A. R. மாணிக்கமுதலியார் வூரீஸ்காலேஜ், வேலூர்.
21. 158. S. ஞானசிகாமணி, ஸ்காட்கிறிஸ்தவ காலேஜ், நாகர் [கோயில்.
22. 277. R. கோபாலன், முத்தியாலுப்பேட்டை ஹைஸ்கூல், [சென்னை.
23. 332. S. P. சாம்பசிவன், பிண்டிலேகாலேஜ், மன்னார்குடி.
24. 356. V. P. கோபாலகிருஷ்ணையர், பச்சையப்பாஸ் ஹை [ஸ்கூல், காஞ்சீபுரம்.
25. 179. G. K. கிருஷ்ணமூர்த்தி, டையமண்ட் ஜூபிலி ஹை [ஸ்கூல்,கோபிச்செட்டிப்பாளையம்.
26. 181. P. இராமசாமி, ௸ ௸
27. 275. V. நாகேஸ்வரன், முத்தியாலுபேட்டை ஹைஸ்கூல், [சென்னை.
28. 339. V. நடேசன், பிண்டிலேகாலேஜ், மன்னார்குடி.
29. 114. A. இராமச்சந்திரன், ஹிந்துகாலேஜ், திருநெல்வேலி.
30. 167. S. அய்யாசாமி நாயுடு, முனிசிபல்காலேஜ்,சேலம்.
31. 325. C. இராஜபாத உடையார், போர்டுஹைஹஸ்கூல், திருவா [ரூர்.
32. 100. K. கலியாணசுந்தரம், விக்டோரியா ஹைஸ்கூல் பாப- [நாசம்.
33. 110. A. நாறும்பூநாதன் C. M. S. காலேஜ், திருநெல்வேலி.
34. 136. R. செல்லையா, St. Francis Xavier's High School, [Palamcottah.
35. 205. T. M. இரத்தினவேல் L. M. H.School. ஈரோடு.
36. 207. S. மீனாக்ஷிசுந்தரம், ௸ ௸

37. 213. K. S. இராமச்சந்திரன் மஹாராஜாஸ் காலேஜ் புதுக் [கோட்டை.

38. 218. R. அம்பாசங்கரராவ், ௸ ௸

39. 223. R. நாராயணசாமிராவ், ௸ ௸

40. 255. P. C. கிருஷ்ணசாமி. வூரீஸ் காலேஜ், வேலூர்.

41. 142. S. மரியஆரோக்கியம், St, Francis Xavier's High [School, Palamcottah

42. 237. K. நடேசன், முனிசிபல்ஹைஸ்கூல், வாலாஜாநகர், (Walajapet.)

43. 253. S. K. நாகேஸ்வரையர், வூரீஸ்காலேஜ், வேலூர்.

44. 276. M. N. கலியாணசுந்தரம், முத்தியாலுப்பேட்டை [ஹைஸ்கூல், சென்னை.

45. 279. N. R. கேசவன், ௸ ௸

46. 165. ஹெலெனதேவரம் (பெண்) மஹாராஜாஸ் பெண் [பாடசாலை, திருவனந்தபுரம்.

47. 172. N. வெங்கிடகிருஷ்ணன், முனிசிபல்காலேஜ், சேலம்.

48. 211. T. V. விஸ்வேஸ்வரன், மஹாராஜாஸ் காலேஜ், புதுக் [கோட்டை.

49. 246. D. S. நேசமணி, வூரீஸ் காலேஜ், வேலூர்.

50. 169. C. பாலகிருஷ்ணநாயுடு, முனிசிபல் காலேஜ்,சேலம்.

51. 274. தும்பவனம் துரைச்சாமி, முத்தியாலுப்பேட்டை [ஹைஸ்கூல், சென்னை.

52. 321. V. இராதாகிருஷ்ணன், முனிசிபல் ஹைஸ்கூல், மாய [வரம்.

53. 65. S. பழனிச்சாமி, A. M. H. School, பசுமலை.

54. 103. S. வைத்தியநாதன், விக்டோரியா ஹைஸ்கூல், பாப [நாசம்.

55. 273. K S. வெங்கடேசையர், ஸ்ரீமகன்த்ஸ் ஹைஸ்கூல், [வேலூர்.

56. 48. S. சோமசுந்தரம், ராஜாஸ் ஹைஸ்கூல், சிவகெங்கை.

57. 90. C. சண்ணமிரான். S. P. G. ஹைஸ்கூல், திருச்சிறுப் [பள்ளி.

58. 91. S. இராஜகோபாலன், ௸ ௸

59. 148. S. அண்ணுஜிராவ், ஹைஸ்கூல், பத்தமடை.

60. 150 S. வெங்கடாஜலம், ௸ ௸

61. 144. M. இராமசாமி, St.Francis Xavier' sHigh School, [Palamcottah.

62. 217. S. சிவசுப்பிரமணியன், மஹாராஜாஸ் காலேஜ், புதுக் [கோட்டை.

63. 235. S. சுப்பிரமணியன், ஹிந்து ஹைஸ்கூல், ஸ்ரீவில்லி [புத்தூர்.

64. 248. N சீதாராமையா, வூரீஸ் காலேஜ் வேலூர்.

65. 308. C. D. துரைச்சாமி, முனிசிபல் ஹைஸ்கூல், மாய [வரம்.

66. 59. K. வரதன், Rajah's Edward VII. Memorial [High School, எட்டையாபுரம்.

67. 164. ஜெஸ்ஸிடேவிட் (பெண்) மஹாராஜாஸ் பெண்பாட சாலே, திருவனந்தபுரம்.

68. 166. R. மனோன்மணி (பெண்) ௸ ௸

69. 219. K. சபாபதி, மஹாராஜாஸ் காலேஜ், புதுக்கோட்டை.

70. 355. T. M. கோபாலகிருஷ்ணன், நாஷனல் ஹைஸ்கூல், [மன்னார்குடி.

71. 126. M. தாவீத், C. M. S. H. S. Palamcottah.

72. 139. G. முத்தையா, St. Francis Xavier's High School, [Palamcottah.

73. 267. P. V. ஸ்ரீநிவாஸராகவன், ஸ்ரீமகன்த்ஸ் ஹைஸ்கூல் [வேலூர்.
74. 338. N. ஸ்ரீநிவாசன், பிண்டிலே காலேஜ், மன்னார்குடி.
75. 79. N. பைரவன், மதுரைக்காலேஜ், மதுரை.
76. 155. S. யேசுபக்தன், ஸ்காட் கிறிஸ்தவகாலேஜ், நாகர் [கோவில்.
77. 215. C. H. சுப்பிரமணியன் மஹாராஜாஸ் காலேஜ், புதுக் [கோட்டை.
78. 125. L. தேவதாசன், C.M.S. ஹைஸ்கூல், Palamcottah.
79. 201. K. இராஜாராம்,ஸெண்ட்மிக்கேல்ஸ் ஹைஸ்கூல், கோய [ம்புத்தூர்.
80. 127. J. சாமுவேல் ஸிரில், C. M. S. ஹைஸ்கூல் Palam- [cottah.
81. 140. C. N. சுப்பராயன், St. Francis Xavier's High [School, Palamcottah.
82. 206. S. மொசுவண்ணன், L.M. H. School, ஈரோடு.
83. 305. K. இராமநாதன், முனிசிபல் ஹைஸ்கூல், மாயவரம்.
84. 86. S. சிங்காரம், போர்டு ஹைஸ்கூல், குளித்தலை.
85. 141. S. பிச்சையா, St. Francis Xavier's High School [Palamcottah.
86. 163. S. ரோஸ் அம்மாள் (பெண்)மஹாராஜாஸ் பெண்பாட [சாலை, திருவனந்தபுரம்.
87. 200. N. பாலசுப்பிரமணியன், ஸெண்ட்மிக்கேல்ஸ் ஹை [ஸ்கூல், கோயம்புத்தூர்.
88. 278. S. வரதாச்சாரி, முத்தியாலுப்பேட்டை ஹைஸ்கூல், [சென்னை.
89. 62. M. திவாகரன், Rajah's Edward VII. Memorial [High School, எட்டையாபுரம்.
90. 63. T. ஆல்பர்ட், A. M. H. School, பசுமலை.
91. 171. K. வெங்கடரமணன், முனிசிபல் காலேஜ், சேலம்.
92. 244. S. சிங்காரம், வூரீஸ் காலேஜ், வேலூர்.
93. 327. K. சுந்தரம்பிள்ளை, போர்டு ஹைஸ்கூல், திருவாரூர்.

94. 64. S. ஜான்தேவசகாயம், A. M. H. School, பசுமலை.

95. 98A. A. V. இராஜகோபாலன், நாஷனல் ஹைஸ்கூல், திருச் [சிறுப்பள்ளி.

96. 229. S. சோமசுந்தரம், கலியாணசுந்தரம் ஹைஸ்கூல், தஞ் [சாவூர்.

97. 289. J. M. பொன்னம்பலம்பிள்ளை, ஹிந்து தியாலாஜிகல் [ஹைஸ்கூல், சென்னை.

98. 95. M. இராமச்சந்திரன், S. P. G. ஹைஸ்கூல், திருச்சி [றுப்பள்ளி.

99. 152. N. சாமுவேல், ஹைஸ்கூல், பத்தமடை.

100. 156. D. ஜாஷுவா, ஸ்காட்கிறிஸ்தவகாலேஜ், நாகர்கோயில்.

101. 194. U. S. நாராயணன், போர்டு ஹைஸ்கூல், உடுமலைப் [பேட்டை.

102. 250. C. V. ஸ்ரீநிவாஸன், ஊரீஸ்காலேஜ், வேலூர்.

103. 319. S. ராஜம், முனிசிபல் ஹைஸ்கூல், மாயவரம்.

104. 42. S. செல்லம், A. M. H. School, பசுமலை.

105. 80. N. S. மீனாக்ஷிசுந்தரம், மதுரைக்காலேஜ், மதுரை.

106. 93. K. சுந்தரம், S. P. G. ஹைஸ்கூல், திருச்சிறுப்பள்ளி.

107. 115. V. தேசிகன், ஹிந்துகாலேஜ், திருநெல்வேலி.

108. 133. V. விஸ்வநாதன், C. M. S. காலேஜ், திருநெல்வேலி.

109. 242. V. அப்புராவ், போர்டு ஹைஸ்கூல், சித்தூர்.

110. 348. T. S. விஜேந்திரராவ், நாஷனல்ஹைஸ்கூல், மன்னார்குடி.

111. 230. A. குப்புசாமி, கலியாணசுந்தரம் ஹைஸ்கூல், [தஞ்சாவூர்.

112. 287. S. ஸ்ரீநிவாஸையங்கார், ஹிந்துதியாலாஜிகல் ஹைஸ்கூல் [சென்னை.

113. 291. S. ராஜரத்னம், St. Gabriel'sHigh School, சென்னை.

B. இராஜராஜேஸ்வர சேதுபதி,

அக்கிராசனாதிபதி,

மதுரைத்தமிழ்ச்சங்கம்,